**Latest Notes Tnpsc Group 2&4 Vao =Tet &Pg TRB Exams Tamil Material**

**சங்கம் மருவிய கால இலக்கியங்கள்**

# பதிணெ்கீழ்க்கணக்கு நூல்கள்

- கி.பி.3ம் நூற்றாண்டு முதல் 6-ம் நைற்றாண்டு வரையிலான காலம்
- இக்காலத்தில் தமிழ்நாட்டை ஆண்டவர்கள் களப்பிரர்கள்
- இக்கால இலக்கியத்திற்கு இருண்டகால இலக்கியம் எனும்பெயரும்
- “நாலடி நாண்மணி நாநாற்பது ஐந்திணை
  முப்பால் கடுங்கோவை பழமொழி-மாமூலம்
  இன்னிலைய காஞ்சியுடன் ஏலாதி என்பனவே
  கைந்நிலைய வாங் கீழ்க்கணக்கு”

1. **அறநூல்கள் - 11**
2. **அகநூல்கள் - 6**
3. **புறநூல் - 1**

## பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் அட்டவணை

| வ.எண் | நூல்பெயர் | பாடல் எண்ணிக்கை | பொருள் | ஆசிரியர் |
|---|---|---|---|---|
| 1. | நாலடியார் | 400 | அறம்/நீதி | சமணமுனிவர்கள் |
| 2. | நான்மணிக்கடிகை | 104 | அறம்/நீதி | விளம்பி நாகனார் |
| 3. | இன்னா நாற்பது | 40+1 | அறம்/நீதி | கபிலர் |
| 4. | இனியவை நாற்பது | 40+1 | அறம்/நீதி | பூதஞ்சேந்தனார் |
| 5. | திரிகடுகம் | 100 | அறம்/நீதி | நல்லாதனார் |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | ஏலாதி | 80 | அறம்/நீதி | கணிமேதாவியார் |
| 7. | முதுமொழிக்காஞ்சி | 10*10 | அறம்/நீதி | கூடலூர்க்கிழார் |
| 8. | திருக்குறள் | 1330 | அறம்/நீதி | திருவள்ளுவர் |
| 9. | ஆசாரக்கோவை | 100+1 | அறம்/நீதி | பெருவாயின் முள்ளியார் |
| 10. | பழமொழி | 400 | அறம்/நீதி | முன்றுரை அரையனார் |
| 11 | சிறுபஞ்சமூலம் | 104 | அறம்/நீதி | காரியாசான் |
| 12. | ஐந்திணை ஐம்பது | 50 | அகம் | பொறையனார் |
| 13. | ஐந்திணை எழுபது | 70 | அகம் | மூவாதியார் |
| 14. | திணைமொழி ஐம்பது | 50 | அகம் | கண்ணஞ் சேந்தனார் |
| 15. | திணைமாலை நூற்றைம்பது | 150 | அகம் | கணிமேதாவியார் |
| 16. | கைந்நிலை | 60 | அகம் | புல்லங்காடனார் |
| 17. | கார்நாற்பது | 40 | அகம் | கண்ணங்கூத்தனார் |
| 18. | களவழி நாற்பது | 40+1 | புறம் | பொய்கையார் |

tnpsctamilnadu.weebly.com

## 1.நாலடியார்

- திருக்குறளுக்கு அடுத்தப்படியாக போற்றப்படும் நீதி நூல்.
- இது நான்கு அடிகளைக் கொண்ட வெண்பாக்களால் ஆனது
- தொகுத்தவர் - பதுமனார்

### வேறுபெயர்கள்

- இது நாலடி நானூறு எனவும் பெயர் பெறும்.
- 'வேளாண் வேதம்' என்ற பெயரும் உண்டு
- குட்டித்திருக்குறள்
- பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் உள்ள ஒரே தொகை நூல்- நாலடியார்
- திருக்குறள் போலவே அறம்,பொருள்,இன்பம் என்ற 3 பிரிவுகளை உடையது.
- அறத்துப்பால் - 13 அதிகாரங்கள்
- பொருட்பால் - 24 அதிகாரங்கள்
- காமத்துப்பால் - 3 அதிகாரங்கள்
- இந்நூல் 400 பாடல்களை கொண்டுள்ளது.
- G.U.போப் இந்நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்
- நாலடியார் கருத்துப்படி நன்மை செய்வோர் வாய்க்கால் போன்றோர்.

### பாடல் வரிகள்

- “கல்வியழகே அழகு”
- “கல்விக்கரையில கற்பவர் நாள் சில”
- “நெல்லுக்கு உமியுண்டு நீருக்கு துரையுண்டு”
- “செல்வம் சகடக்கால் போல் வரும்”

## 2.நாண்மணிக்கடிகை

- கடிகை என்பதற்கு துண்டு என பொருள்.4 மணித்துண்டுகள் இணைந்த மாலை போல் ஒவ்வொரு பாடலிலும் 4 கருத்துகள் இடம்பெற்றுள்ளதால் இப்பெயரை பெற்றது.
- இது நான்குவகை மணிகளால் ஆன ஆபரணம் நான்மணிக்கடிகை என்று அழைக்கப்படுகிறது
- இந்நூலின் 7-100 வது பாடலை போப் மொழிபெயர்த்துள்ளார்.
- இந்நூல் 104 பாடல்களைக்கொண்டுள்ளது.

### பாடல் வரிகள்

- ‘இளமைப்பருவத்து கல்லாமைக்குற்றம்’
- ‘அல்லவை செய்வார்க்கு அறம் கூற்றம்’
- ‘செல்வது வேண்டின் வெகுளி வேண்டல்’

## 3.இன்னா நாற்பது

- துன்பம் தரும் செயல்களைத்தொகுத்துக்கூறும் நூல்.
- ஒவ்வொரு பாடலின் முடிவிலும் இன்னா என்று முடிவதால் இப்பெயர் பெற்றது.
- 40 பாடல்களைக்கொண்டது.

பாடல்வரிகள்

- ‘ஊணைத்தின்று ஊனைப்பெருக்குதல் இன்னா
- ‘உண்ணாது வைக்கும் பெரும்பொருள் இன்னா’

## 4.இனியவை நாற்பது

- இனிய செயல்களை 40 பாடல்களில் தொகுத்துக்கூறியதால் இப்பெயரைப்பெற்றது.

**பாடல்வரிகள்**

- ‘ஊணைத்தின்று ஊனைப்பெருக்காமை இனிது’
- ‘மானம் அழிந்த பின் வாழாமை இனிது

## 5.திரிகடுகம்

- திரி என்றால் 3. கடுகு என்றால் காரமான பொருள்.
- திப்பிலி,சுக்கு,மிளகு எனும் மூன்றினால் ஆன பொருளுக்கு திரிகடுகம் எனப்பெயர்.
- இதில் ஒவ்வொரு பாடலிலும் வரும் 3அறக்கருத்துகள் மக்களின் மனமயக்கத்தைப்போக்கும்.
- இது 100 வெண்பாக்களை உடையது.

**பாடல்வரிகள்**

- ‘நெஞ்சம் அடக்குதல் வீணாகும்’
- ‘தாளாளன் என்பான் கடன்பட வாழாதான்’

## 6.ஆசாரக்கோவை

- ஆசாரம் - ஒழுக்கம், கோவை - ஒடுக்கிக்கூறல்
- நாள்தோறும் செய்யவேண்டிய கடைகள் பற்றி கூறுகிறது
- இது ஆரிடம் எனும் வடமொழிநூலை மூலமாக கொண்டது.

## 7.பழமொழி

- நீதிக்கருத்தை விளக்கிக்காட்டும் வகையில் அமைந்த நூல்.
- திருக்குறள்_நாலடியாரோடு ஒருங்கே வைத்து எண்ணத்தக்க பெருமை உடைய நூல்
- தொல்காப்பியர் இதனை முதுசொல் எனக்குறிப்பிடகிறார்.

**இதன் வேறுபெயர்கள்**

- பழமொழி நானூறு
- உலக வசனம்
- முதுமொழி
- இது 400 பாடல்களை உடையது
- 'பாம்பின் கால் பாம்பறியும்'
- 'ஆற்றுநா வேண்டுவது இல்'

## 8.சிறுபஞ்சமூலம்

- பஞ்சம் - 5 , மூலம் - வேர்.
- இந்நூல் கடவுள் வாழ்த்துடன் 97வெண்பாக்களை கொண்டது.
- சிறுவழுதுணை,நெருஞ்சி,சிறுமல்லி,பெருமல்லி,கண்டங்கத்திரி ஆகிய 5 வேர்கள் உடலுக்கு வலிமைக்கொடுப்பதைப்போல இந்நூலில் அமைந்த 5 கருத்துகள் மக்கள் மனதிற்கு வலிமை கொடுக்கும்.

**பாடலின் விளக்கம்**

- "கண்ணுக்கு அழகு இரக்கம் கொள்ளுதல்
  காலுக்கழகு இரந்து செல்லாமை
  இசைக்கழகு கேட்டார் நன்றென்றல்
  ஆராய்ச்சிக்கழகு முடிவை துணிந்துரைத்தல்
  அரசனுக்கழகு குடிமக்கள் வருந்தாமல் காத்தல்"

## 9.ஏலாதி

- ஏலம் இலவங்கம் நாககேசரம் சுக்கு மிளகு திப்பிலி ஆகிய 6 மருந்துப்பொருட்கள் கலவை.
- இந்நூல் 4 அடியில் 6 அறக்கருத்துகளை கூறுகிறது.
- இந்நூல் சிறப்பாயிரம்(முன்னுரை) தற்சிறப்பாயிரம்(முடிவுரை) உட்பட 81 வெண்பாக்களை உடையது.
- இந்நூலின் நற்கருத்து கற்பவரின் அறியாமையை விலக்கும்.
- இது தமிழருக்கு அருமருந்து போன்ற இலக்கியம்.
- பழி இல்லா மன்னன் நூல்கள் போற்றும்படி வாழ்வான் என இந்நூல் கூறுகிறது.
- இந்நூலின் ஆசிரியர் கணிமேதாவியார் சமண சமயம் சார்ந்தவர்.

## 10.திருக்குறள்

- திருக்குறள்;-அடையெடுத்த ஆகுபெயர் (அ) கருவியாகு பெயர்

- திரு என்றால் செல்வம் (அ) மேன்மை
- திரு- எனும் அடைமொழி கொண்ட நூல்
- இது குறள் வெண்பாக்களால் ஆனது.
- இப்பாடல்கள் அனைத்துமே குறள் வெண்பா என்னும் வெண்பா வகையைச் சேர்ந்தவை.
- "குறள்' என்றும் அதன் உயர்வு கருதி "திரு" என்ற அடைமொழியுடன் -"திருக்குறள்" என்றும் பெயர் பெறுகிறது
- 133 அதிகாரங்கள்-1330 குறட்பாக்களை உடையது.
- அறத்துப்பால் - 38 அதிகாரங்கள்
- பொருட்பால் - 70 அதிகாரங்கள்
- காமத்துப்பால் - 25 அதிகாரங்கள்
- இது 9 இயல்களை உடையது.

| அறத்துப்பால் | பொருட்பால் | காமத்துப்பால் |
|---|---|---|
| **இயல்கள் மற்றும் அதிகாரங்களின் எண்ணிக்கை** | | |
| **1.பாயிரவியல்(4)** | **5.அரசியல்(25)** | **8.களவியல்(7)** |
| **2.இல்லறவியல்(20)** | **6.அங்கவியல்(32)** | **9.கற்பியல்(18)** |
| **3.துறவறவியல்(13)** | **7.ஒழிவியல்(13)** | |
| **4.ஊழியல்(1)** | | |

- பதிணென்கீழ்க்கணக்கு நூல்களில் இதுவே மிகப்பெரியது மற்றும் அதிகப்பாடல்களை உடையது.
- ‘அ’-கரத்தில் தொடங்கி ‘ன’-கரத்தில் முடியும் நூல்.
- அதிக மொழிகளில்(107) மொழிபெயர்க்கப்பட்டுள்ள நூல் .
- ஈரடிகளில் உலகத் தத்துவங்களை சொன்னதால் - இது ‘ஈரடி நூல்’
- ”திருவள்ளுவர் ஆண்டு” என்பது பொது ஆண்டோடு 31 ஆண்டுகள் கூட்ட வேண்டும்.

**திருக்குறளை மொழிபெயர்த்தவர்கள்**

- ஆங்கிலம் - போப்.
- லத்தீன் - வீரமாமுனிவர்.
- வடமொழி - அப்பாதீட்சிதர்.
- மலையத்துவசன் மகன் ஞானப்பிரகாசம் 1812-ல் திருக்குறளை முதன்முதலில் பதிப்பித்து தஞ்சையில் வெளியிட்டார்.
- திருக்குறளுக்கு முதன் முதலில் உரை எழுதியவர்-மணக்குடவர்.

## பதிணென்கீழ்க்கணக்கு நூல்கள்

- ஏழு என்ற சொல் எட்டுக் குறட்பாக்களில் எடுத்தாளப்பட்டுள்ளது.
- மனிதன் மனிதனாக வாழ மனிதன் மனிதனுக்கு கூறிய அறிவுரை
- ஐந்தாம் வேதம் என்று அழைக்கப்படும் நூல்.
- விக்டோரியா மகாராணியால் காலையில் கண்விழுத்ததும் விரும்பி படிக்கப்படும் நூல்.

| வேறுபெயர்கள் | | |
|---|---|---|
| **தமிழ்மறை** | **வாயுறை வாழ்த்து** | **தமிழ்மாதின் இனியஉயர்நிலை** |
| **முப்பால்** | **வள்ளுவப்பயன்** | **பொருளுரை** |
| **உத்திரவேதம்** | **பொய்யாமொழி** | **முதுமொழி** |
| **தெய்வநூல்** | **காலம்கடந்தபுதுமைநூல்** | **தமிழர் திருமுறை** |
| **உலகப்பொதுமறை** | **ஈரடி வெண்பா** | **அற இலக்கியம்** |

| வள்ளுவரின் வேறுபெயர்கள் | |
|---|---|
| 1.தெய்வப்புலவர் | **6.பெருநாவலர்** |
| 2.நான்முகனார் | **7.நாயனார்** |
| 3.மாதானுபங்கி | **8.தேவர்** |
| 4.செந்நாப்போதர் | **9.முதற்பாவலர்** |
| 5.பொய்யில் புலவர் | |

| திருக்குறளுக்கு உரைசெய்த பதின்மர் | |
|---|---|
| **1.தருமர்** | **6.திருமலையார்** |
| **2.மணக்குடவர்** | **7.மல்லர்** |
| **3.தாமத்தர்** | **8.பருதி** |
| **4.நச்சர்** | **9.கவிப்பெருமாள்** |
| **5.பரிமேலழகர்** | **10.காளிங்கர்** |

**(இதல் பரிமேலழகர் உரை சிறந்தது).**

- இந்நூல் ரஸ்யாவின் அணுதுளைக்காத கிரம்ளின் மாளிகையில் வைக்கப்படுள்ளது.
- இங்கிலாந்தில் இது வியத்துடன் வைக்கப்பட்டுள்ளது
- இந்நூலின் பெருமையை பாடிய 53 சான்றோர்களின் பாடல்கள் தொகுக்கப்பட்டு திருவள்ளுவமாலை எனும் பெயர்பெற்றுள்ளது.
- திருவள்ளுவரது காலம் கி.மு.31.
- இதைக்கொண்டே திருவள்ளுவர் ஆண்டு கணக்கிடப்பட்டுள்ளது.
- 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'-என்று பொதுநெறி காட்டியவர்.

## 11.முதுமொழிக்காஞ்சி

- 'கல்வியை விட ஒழுக்கமே சிறந்தது'-எனக்கூறும் நூல்.
- வேறுபெயர் - அறவுரைக்கோவை
- இது காஞ்சித்திணையின் துறைகளுல் ஒன்று.
- 10 அதிகாரங்களையும் 100 பாடல்களையும் உடையது.

**பாடல் விளக்கம்**

- கற்றலைவிட ஒழுக்கமாக இருத்தலே சிறந்தது
- கற்றதைவிட மறவாமல் இருத்தலே சிறப்பு
- இளமையைவிட நோயற்றவாழ்வே சிறப்பு
- அழகைவிட நாணமே சிறப்பு
- குலப்பெருமையை விட ஒழுக்கமே சிறப்பு
- நூல் கற்றலைவிட கற்றவரைபின்பற்றலே சிறப்பு
- பகைவரை தண்டித்தலைவிட நன்மைசெய்தலே சிறப்பு

## 12.ஐந்திணை ஐம்பது

- முல்லை குறிஞ்சி நெய்தல் பாலை மருதம் என 5 திணைக்கும்,10 பாடல் வீதம் 50 பாடல்களை உடையது.
- முல்லைத்திணையை முதலாமாக கொண்ட நூல்.

## 13.திணைமொழி ஐம்பது

- பண்டைத் தமிழ் இலக்கியங்களில் காணும் வழக்கிற்கு அமைய அகப்பொருள் இலக்கியமான இது ஐந்து நிலத்திணைகளையும் பின்னணியாக வைத்து எழுதப்பட்டுள்ளது.
- இதிலுள்ள ஐம்பது பாடல்களும் திணைக்குப் பத்துப்பாடல்களாக அமைக்கப்பட்டுள்ளன

## 14.ஐந்திணை எழுபது

- இந்நூலில் குறிஞ்சி முல்லை பாலை மருதம் நெய்தல் என்ற அடைவில் திணைகள் அமைந்துள்ளன.
- திணைக்கு 14 பாடல்கள் வீதம் மொத்தம் எழுபது(70) பாடல்களைக் கொண்டதால் இந்நூல் ஐந்திணை எழுபது எனப் பெயர் பெற்றது
- பாலை நிலம் முல்லையும் குறிஞ்சியும் தம் இயல்புகெட்டுத் தோன்றுவது ஆதலானும் நான்கு திணைகளுக்கும் பொதுவாய் 'நடுவண் ஐந்திணை' என்று

சிறப்பிக்கப் பெறுவதனாலும் பாலைத் திணை இதில் நடுவில் அமைக்கப்பட்டு உள்ளது என்பர்..

## 15.திணைமாலை நூற்றைம்பது

- இம்மையின்வினை இம்மையிலே பயனளிக்கும் எனக்கூறும் நூல்.

## 16.கைந்நிலை

- இது அறுபது பாடல்களால் ஆனது.
- இதற்கு ஐந்திணை அறுபது என்ற பெயரும் உண்டு

## 17.கார்நாற்பது

- முல்லைத்திணையை மட்டும் பாடிய நூல்.

## 18.களவழி நாற்பது

- 40 பாடலிலும் களம் எனும் சொல் வருவதால் இப்பெயர் பெற்றது.
- சேரன் கணைக்காலிரும்பொறையை சிறையிலிருந்து விடுவிப்பதற்காக பொய்கையார் என்ற புலவர் சோழன் செங்கணானிடம் பாடியது.

tnpsctamilnadu.w